**பட்டியல் வகுப்பினர் பழங்குடியினருக்கான (வன்கொடுமைதடுப்பு)**

**சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை: திரு. M. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

அமர்வு நீதிபதி பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான(வன்கொடுமை தடுப்பு)

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 54/2025**

[CNR.NO.TNTV16-000054 -2025]

தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 28/2020**

[CNR.NO.TNTJ09-000399 -2020]

| | |
|---|---|
| புகார்தாரரின் பெயர் | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>திருத்துறைப்பூண்டி உட்கோட்டம்,<br>திருத்துறைப்பூண்டி காவல் நிலையம்,<br>குற்ற எண். 357/2019. |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | **1. சாந்தி, வயது (49/2026)**<br>க/பெ. ரமேஷ்,<br>சாமியப்பா நகர்,<br>திருத்துறைப்பூண்டி<br>திருத்துறைப்பூண்டி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**2. சூரியா, வயது ( 27/2025)**<br>த/பெ. ரமேஷ், |

| | |
|---|---|
| | சாமியப்பா நகர்,<br>திருத்துறைப்பூண்டி,<br>திருத்துறைப்பூண்டி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**3. சீனு (எ) சீனிவாசன் வயது (26/2025)**<br>த/பெ. ரமேஷ்,<br>சாமியப்பா நகர்,<br>திருத்துறைப்பூண்டி,<br>திருத்துறைப்பூண்டி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br>**(கு.வி.மு.ச. பிரிவு 319-ன் கீழ் வழக்கு விசாரணையின் போது 2 மற்றும் 3 எதிரிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர்.)** |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் விபரம் | **1-ம் எதிரி மீது** இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352.<br>**2, 3 எதிரிகள் மீது** இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352. |
| எதிரிகள் | 1ம் எதிரி மாண்புமிகு சென்னை |

| | | |
|---|---|---|
| காவலில் அடைக்கப்பட்ட நாள் | உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவின்படி கடந்த 25.11.2019-ம் தேதியன்று தஞ்சாவூர் முதலாவது மாவட்ட கூடுதல் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை மனு தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளார்.<br>2 மற்றும் 3 எதிரிகள் வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 319-ன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | 23.09.2018 | |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 17.02.2020 | |
| கு.வி.மு.ச பிரிவு 228-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 1 ம் எதிரி மீது 24.11.2021<br>2, 3 எதிரிகள் மீது 03.09.2024 | |
| கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பலவகை மனுக்கள் மற்றும் அதன் மீதான உத்தரவுகள். | -- | |
| **சாட்சிகளின் பெயர்கள்** | **மு.வி. நாள்** | **கு.வி . நாள்** |
| அ.சா.1 அமுதா - நிகழ்நிலை புகார்தாரர் | 28.12.2021<br>21.09.2024 | 03.03.2022<br>10.11.2025 |

| | | |
|---|---|---|
| அ.சா.2 மனோகர் | 28.12.2021 | 28.12.2021 |
| அ.சா.3 முத்து | 28.12.2021 | இல்லை |
| அ.சா.4 மாரிமுத்து | 28.03.2022 | இல்லை |
| அ.சா.5 ராஜன்பாபு - வட்டாட்சியர் | 18.05.2022 | இல்லை |
| அ.சா.6 செந்தில்குமார் - வட்டாட்சியர் | 08.06.2022 | இல்லை |
| அ.சா.7 பாலசுப்பிரமணியன் - சிறப்பு உதவி ஆய்வாளர் | 08.062022 | இல்லை |
| அ.சா.8 இனிக்கோ திவ்யன் - காவல்துணை கண்காணிப்பாளர் | 30.09.2025 | 30.09.2025 |
| அ.சா.9 பழனிச்சாமி - காவல்துணை கண்காணிப்பாளர் | 23.02.2026 | 23.02.2026 |
| பா.நா.சு.ச பிரிவு 351-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 26.02.2026 | |
| எதிரிகள் தலைமறைவான நாள் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | -- | |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் | குற்றவாளிகள் இல்லை | |

| | |
|---|---|
| கூற்றுக்கள் | |
| நீதிபதியின் தீர்மானம் | எதிரிகள் குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக**,<br>**1-ம் எதிரி** மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352- ன் கீழும்,<br>**2, 3 எதிரிகள்** மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352-ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 235-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 07.05.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுக்காக சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர்

திரு. S. மகாதேவன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B. டில்லிபாபு, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் செய்யப்பட்ட வாதங்கள் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததன் அடிப்படையில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

**1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :-**

இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அமுதா என்பவர் இந்து பறையன் வகுப்பை சார்ந்தவர் ஆவார். (1ம் எதிரி) சாந்தி இந்து அகமுடையார் வகுப்பை சார்ந்தவர் ஆவார். கடந்த 22.09.2018-ம் தேதி மாலை 03.00 மணியளவில் மேற்படி அ.சா.1 ஆனவர் அவரது வீட்டில் இருந்த போது இவ்வழக்கின் (1ம் எதிரி) சாந்தி அ.சா.1-ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அ.சா.1 ஐ பார்த்து மாடுதிங்கிற நாத்த பற செருக்கி ஏன்டி எங்க தெருவுல குடியிருக்குற உன்னால தான்டி எங்க அக்கா மவன் பற சாதி பெண்ண கல்யாணம் செஞ்சிகிட்டான் என்றும், ஏதுடி உனக்கு காசு எங்க தெருவுல மூனு வீடு வாங்கியிருக்க பற தேவுடியா, குச்சிகாரி செருக்கி எங்க தெருவை விட்டு ஓடிடு இல்லைனா உன்ன கொலை செய்துவிடுவேன் என மிரட்டி அடித்து கீழே தள்ளி சாதியின் பெயரை சொல்லி திட்டியதாக (1ம் எதிரி) எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), 506(i), 323 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), 3(2) (va) -ன் கீழ் தண்டிக்கப்பட

வேண்டுமென திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் (1ம் எதிரி) சாந்தி என்பவருக்கு எதிராக இறுதி அறிக்கையினை தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி இறுதி அறிக்கையானது தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண். 28/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**3.** (1ம் எதிரி) சாந்தி தஞ்சை நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கு ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு பின்னர் போதிய அவகாசம் வழங்கப்பட்டு இரு தரப்பிலும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் (1ம் எதிரி) சாந்தி என்பவருக்கு எதிராக 1-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு (1ம் எதிரி) சாந்தியிடம் குற்றச்சாட்டை பற்றி கேட்டபோது அவர் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். இதனால் அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**4.** தஞ்சை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் விசாரணை செய்யபட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வழக்கில் மீதி சாட்சியங்கள் விசாரணை செய்யப்பட நிலுவையிலிருந்து வந்தபோது இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா-1 அமுதா என்பவர் 2 மற்றும் 3 எதிரிகளை இவ்வழக்கில் சேர்க்க கோரி கு.வி.மு.ச பிரிவு 319-ன் கீழ் மனு தாக்கல் செய்து அந்த மனு கு.ப.ம.எண்.522/2022-ல் கடந்த 28.10.2022-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்த 2 மற்றும் 3 எதிரிகளுக்கு அழைப்பானை அனுப்பப்பட்டு 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரானவுடன் வழக்கு ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு பின்னர் 2 மற்றும் 3 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352 கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு எதிரிகளிடம் எடுத்துக்கூறியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளனர். அதன்பின்னர், இந்த வழக்கில் ஏற்கனவே விசாரணை செய்யப்பட்டிருந்த சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய 2 மற்றும் 3 எதிரிகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டது. இவ்வாறான நிலையில், இந்த வழக்கு தஞ்சை நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்து வந்தபோது திருவாரூர்

மாவட்டத்தில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான இந்த புதிய நீதிமன்றம் கடந்த 19.07.2025 ம் தேதியன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் இவ்வழக்கு நிகழ்வானது இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் நடைபெற்றுள்ளது என்பதால் மேற்படி இவ்வழக்கு தஞ்சை நீதிமன்றத்தில் இருந்து இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு கோப்பு வந்தவுடன் புதிதாக வழக்கு எண் S.S.C. No. 54/2025 கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், இவ்வழக்கில் மீதம் விசாரணை செய்யப்பட வேண்டிய சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** இவ்வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் அ.சா-1 முதல் அ.சா-9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு** :-

(i) **<u>அ.சா.1 அமுதா,</u>** இவர் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் ஆவார். இவர் திருத்துறைப்பூண்டி சாமியப்பா நகரில் வசித்து வருகிறார். மேலும் இவர் இந்து பறையர் வகுப்பை சார்ந்தவர் ஆவார். 1ம் எதிரியினுடைய மகன்கள் 2 மற்றும் 3 எதிரிகள் ஆவார்கள். எதிரிகளும் இந்த அ.சா.1-ம், ஒரே தெருவில் வசித்து வருகின்றனர். இந்த அ.சா.1 க்கு சொந்தமான வீட்டில் 1-ம் எதிரியின் அக்கா மகனான அ.சா.2 மனோகரன் என்பவர் குடியிருந்து வந்து பின்னர் வீட்டை காலி செய்துள்ளார். இந்நிலையில், கடந்த 22.09.2018-ம் தேதி மாலை 03.00 மணியளவில் இந்த அ.சா.1 இவரது வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தபோது இந்த 1-ம் எதிரி அ.சா.1-ஐ பார்த்து அ.சா.2 மனோகரன் என்பவர் இந்த அ.சா.1-னுடைய சாதியை சார்ந்த பெண்ணை சேர்த்து கொண்டதாக கூறி அ.சா1-ஐ பார்த்து "பறச்சி பறச்சி" என்று பேசியுள்ளார். இது குறித்து அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன் பேரில் இருவரையும் அழைத்து பேசியுள்ளனர். இருந்த போதிலும், 1ம் எதிரியானவர், அ.சா.1-ன் வீட்டிற்கு வந்து <u>"பறச்சி புகார் கொடுத்தாளே"</u> என்று பேசியுள்ளார். மேலும், வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த அ.சா.1-ஐ, எதிரி உதைத்து கீழேதள்ளி 1-ம் எதிரியின் மகன்களான 2 மற்றும் 3 எதிரிகள் "கத்தியை எடுத்துவந்து குத்திவிடுவேன் பறச்சி" என்று அ.சா.1-ஐ பேசியுள்ளனர். 1-ம் எதிரி தனது கணவர் வண்ணியர்

சமூகத்தை சேர்ந்தவர் என்றும், இருந்தபோதிலும் அவர் பறச்சி காலில் விழுந்து கிடக்கிறார் என்று பேசியுள்ளார். 2, 3 எதிரிகளும் இவ்வாறு பேசியுள்ளனர். இது குறித்து அ.சா.1 ஆனவர் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

**(ii) அ.சா.7 பாலசுப்பிரமணியன்** சிறப்பு உதவி ஆய்வாளர். இவர் கடந்த **02.08.2019**-ம் தேதி திருத்துறைப்பூண்டி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 கொடுத்த புகாரை பெற்று நிலைய மனு எண்.419/2018 என மனு எண் வழங்கியுள்ளார். பின்னர், மேற்படி மனுவின் மீது நிலைய குற்ற எண் 357/2019 ச/பி. 448, 294 (b), 323, 506 (2) of IPC and Sec. 3 (1)(r), 3(2) (va) of SC/ST (PoA) Act ன் கீழ் அ.சா.ஆ.6 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

**(iii) அ.சா.8 இனிகோ திவ்யன்,** திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்பில் இருந்தபோது அ.சா.ஆ-6 ஆன முதல் தகவல் அறிக்கையின் கீழான வழக்கை, புலன் விசாரணை செய்ய வேண்டுமென திருவாரூர் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் பிறப்பித்த அ.சா.ஆ-7 அலுவலக செயல்முறை ஆணையை பெற்று கடந்த 03.08.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் சம்பவ சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு

அ.சா.ஆ.8 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ-9 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். இந்நிலையில், விடுமுறையில் சென்றிருந்த திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் **அ.சா.9 பழனிசாமி**, அவர்கள் மீண்டும் பணிக்கு வந்தபோது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சா.ஆ.10 செயல்முறை ஆணைமூலம் அ.சா-9 ஆனவரை புலன் விசாரணை செய்ய உத்தரவிட்டதை தொடர்ந்து அ.சா-9 இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு திருத்துறைப்பூண்டி வட்டாட்சியராக பணிபுரிந்த **அ.சா.5 ராஜன்பாபு** அவர்களை விசாரணை செய்து அ.சா.1க்கான அ.சா.ஆ.4 ஆன சாதி சான்றிதழும், 1-ம் எதிரிக்கான அ.சா.ஆ.5 ஜாதி சான்றிதழையும் பெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். மேலும், திருத்துறைப்பூண்டி மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்த **அ.சா.6 செந்தில்குமார்** என்பவரை விசாரணை செய்து அவர் மூலம் 1ம் எதிரி அகமுடையர் வகுப்பை சேர்ந்தவர் என அ.சா.ஆ.5 சாதி சான்றிதழை பெற்றுள்ளார். பின்னர் இவரது விசாரணையை முடித்து கடந்த 29.11.2019 ம் தேதி 1-ம் எதிரி மீது மட்டும் இ.த.ச பிரிவுகள் 448, 294 (b), 506 (2), 323 r/w 3(1)(r), 3(2)(va) ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(iv) **அ.சா.2 மனோகர்**, இவருக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது எனவும், **அ.சா-3 முத்து மற்றும் அ.சா.4 மாரிமுத்து** ஆகியோர்கள் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகஜரில் உள்ள கையொப்பங்களை அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது என கூறியுள்ளனர். இவர்களது கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.2 மற்றும்அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. திருத்துறைப்பூண்டி வட்டாட்சியராக பணிபுரிந்த **அ.சா.5 ராஜன்பாபு** இவர் அ.சா.1 அமுதா என்பவர் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர் என அ.சா.ஆ.4 சாதி சான்றிதழும், **அ.சா.6 செந்தில்குமார்** இவர் எதிரி அகமுடையர் வகுப்பை சேர்ந்தவர் என அ.சா.ஆ.5 சாதி சான்றிதழ் வழங்கியுள்ளதையும் கூறியுள்ளார்.

**7.** இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சியங்கள் விசாரணை முடிந்தவுடன் அரசுத்தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு எதிராக உள்ள சாட்சியங்களை குறித்து கு.வி.மு.ச 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்டபோது எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சியங்களை பொய் என்று கூறியுள்ளார்கள். மேலும், தங்களது தரப்பில் சாட்சியங்கள் எதுவும் இல்லை என்று கூறியுள்ளார்கள்.

**8.** இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,

1-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352 -ன் கீழும்,

2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352 -ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

9. <u>அரசு தரப்பு வாதம்</u> :

இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா-1 தன்னை இந்த 1ம் எதிரி சாதி பெயரை சொல்லி பின்னர் உதைத்து கீழே தள்ளியதாகவும், 2 மற்றும் 3 எதிரிகள் கத்தியை எடுத்து குத்தி விடுவோம் என மிரட்டி சாதி பெயரை சொல்லி திட்டியுள்ளனர் என சாட்சியம் அளித்துள்ளார். இதன் காரணமாக மேற்படி எதிரிகள் சட்டப்படி குற்றம் புரிந்துள்ளது தெரியவருகிறது. இதனால் எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வாதம் செய்துள்ளார்.

10. <u>எதிரிகள் தரப்பு வாதம்</u> :

இந்த எதிரிகள் உண்மையில் எந்த விதமான குற்றமும் செய்யவில்லை. அ.சா-1 காவல் நிலையத்தில் கொடுத்த அ.சா.ஆ-1 ஆன

புகாரில் 3 எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டுள்ளார். ஆனால் புலனாய்வு முடிவில் காவல் துறையினர் 1-ம் எதிரி மட்டுமே குற்றம் செய்துள்ளதாக கூறி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி இறுதிஅறிக்கை காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1-ன் சாட்சியத்தை தவிர வேறு எவருடைய சாட்சியமும், அரசுத்தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் வகையில் இல்லை. அ.சா.1-ன் சாட்சியமும் வழக்கின் பொருண்மைகளுக்கு முரண்பாடாக காணப்படுகிறது. அதனால் இந்த வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்திட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**11. <u>தீர்வு</u> :-**

இந்த வழக்கில், அ.சா.1 ஆனவர் இந்து பறையன் சமூகத்தை சார்ந்தவர் என்பது அ.சா.ஆ.4 ஆன சாதி சான்றிதழ் மூலமும், 1-ம் எதிரியானவர் இந்து அகமுடையார் வகுப்பை சார்ந்தவர் என்பது அ.சா.ஆ.5 ஆன சாதி சான்றிதழ் மூலமும் தெரியவருகிறது. மேலும், இந்த பொருண்மைகள் எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. தற்பொழுது

பட்டியல் சமூகத்தை சேர்ந்த அ.சா.1-ஐ எதிரிகள் மூவரும் சாதி பெயரை சொல்லி இழிவாக பேசினார்களா 1ம் எதிரி அ.சா-1யை அடித்தாரா 2, 3 எதிரிகள் அ.சா.1-ஐ மிரட்டினார்களா என்பதை கண்டறிய ஆவணங்கள் பார்வையிடப்பட்டது.

**12.** இவ்வழக்கில், அ.சா.1 ஆனவர், அரசுத்தரப்பு வழக்கின் மீது பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில், இந்த எதிரிகளில் 1-ம் எதிரி தனது சாதியின் பெயரை சொல்லி திட்டிதாக்கியதாகவும், 2, 3 எதிரிகள் அருவாளை காட்டி மிரட்டியதாகவும் மேலும், 1-ம் எதிரியின் கணவரும், 2 மற்றும் 3-ம் எதிரிகளின் தந்தையுமானவர் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும், அவர் பறைச்சி காலில் விழுந்து கிடக்கிறார் என்று அ.சா.1-ன் முன்பாக பேசியதாக கூறியுள்ளார். இந்த வழக்கில் அ.சா.1 ஐ தவிர வேறு யாரும் சம்பவத்தை பார்த்ததாக சாட்சியமளிக்கவில்லை. இந்த அ.சா.1 ஆன பாதிக்கப்பட்ட நபர் மட்டுமே இந்த எதிரிகள் குற்றமிழைத்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் இவரது சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகளை குற்றவாளிகள் என முடிவு செய்யலாமா என்பதை பொறுத்தவரையில், பொதுவாக பாதிக்கப்பட்ட அ.சா.1-ன் சாட்சியம் மட்டுமே போதுமானதாகும். இருந்தபோதிலும், ஒரே ஒரு நபரின் சாட்சியத்தை மட்டுமே வைத்து

வழக்கில் தீர்வு காணும்போது மிகவும் கவனமாக மேற்படி சாட்சியத்தை பரிசீலனை செய்ய வேண்டும். வழக்கின் பொருண்மைகளுக்கு முரண்பாடுகள் உள்ளதாக மேற்படி சாட்சியம் இல்லாது இருக்கவேண்டும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13.** அ.சா.1 காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 ஆன புகாரில் எதிரிகள் தங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து தன்னை திட்டியதாக கூறியுள்ளார். ஆனால், நீதிமன்றத்தில் சம்பவ இடம் வீட்டின் அருகே என்று கூறியுள்ளார். இதனை பார்க்கும்போது, உண்மையில் சம்பவம் நடந்த இடம் என்பது அ.சா.1-ன் வீட்டிற்குள்ளா அல்லது வீட்டிற்கு வெளியேவா என்பதை சரியாக அறியமுடியவில்லை. அ.சா.1 புகாரில் குறிப்பிட்டுள்ளதுபோல், எதிரிகள் அ.சா.1-ன் வீட்டிற்குள் புகுந்து அ.சா.1ன் சாதியின் பெயரை குறிப்பிட்டு பேசியிருந்தால் ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டத்தின் கீழ் குற்றம் என எடுத்துக்கொள்ள இயலாது. ஏனெனில், வீடு என்பது பொது இடம் அல்ல. அ.சா.1 ஐ பொது இடத்தில் வைத்து சாதி பெயரை சொல்லி இழிவாக பேசியிருந்தால் மட்டுமே குற்றம் ஆகும். இந்த சம்பவம் வீட்டிற்கு வெளியே நடந்ததாக எடுத்துக்கொண்டால், அதாவது இந்த அ.சா.1 ஐ எதிரிகள் திட்டியிருக்கும்பட்சத்தில் அதை யாரும் பார்த்ததாக சாட்சியமளிக்காத காரணத்தினால் பொது மக்கள் பார்வையில்

எதிரிகள் திட்டியதாக எடுத்துக்கொள்ள இயலாது. அதனால், முன்னதாக கூறியுள்ளபடி ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டத்தின் கீழ் குற்றமாக எடுத்துக்கொள்ள இயலாது. இதனால், அ.சா.1-ன் சாட்சியம் தெளிவற்றதாக உள்ள காரணத்தினால் இவரது சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகள் குற்றமிழைத்துள்ளார்கள் என்று முடிவு காண்பது ஏற்புடையது அல்ல என இந்நீதிமன்றம் முதற்கட்டமாக கருதுகிறது.

**14.** குற்றம் நடந்ததாக சொல்லக்கூடிய தேதியானது எந்த தேதி என குறிப்பிட்டு அ.சா.ஆ.1 புகாரில் குறிப்பிடப்படவில்லை. இருந்த போதிலும் அ.சா-1ன் சாட்சியத்தின் அடிப்படையில் இந்த குற்ற சம்பவம் கடந்த தேதி 22.09.2018 என தெரிய வருகிறது. அ.சா.ஆ-1 ல் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள குறிப்புகள் மூலம் அ.சா.1 ஆனவர் கடந்த 23.09.2018 ஆம் தேதி இந்த அ.சா.ஆ.1 ஆவணத்தை காவல் நிலையத்தில் வழங்கியுள்ளதாக தெரியவருகிறது. மேலும், அ.சா.ஆ.1 ஆன புகாரில் செய்யப்பட்டுள்ள மேற்குறிப்புகள் மூலம் இந்த அ.சா.ஆ-1 புகாரின் பேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கடந்த 02.08.2019 ஆம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. **பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வ.கொ.த) சட்டத்தின்** கீழான வழக்குகளை பொருத்தவரையில், புகாரை பெற்றவுடன் வழக்கு பதிவு

செய்து புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டிய காவல்துறையினர் புகாரை பெற்றவுடன் வழக்கு பதிவு செய்யவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், புகாரை பெற்று பின்னர் 11 மாத காலம் விசாரணை மேற்கொண்டதாகவும் மேற்படி விசாரணையின்அடிப்படையில் குற்றம் நடந்துள்ளதாக அ.சா.ஆ-6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக காணப்படுகிறது. இந்த பொருண்மைகளை பொறுத்தவரையில் புகாரை பெற்ற உடனே வழக்கு பதிவு செய்யாமல் 11 மாத காலங்கள் கழித்து வழக்கு பதிவு செய்துள்ளது என்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. அதிலும், இந்த **பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வ.கொ.த) சட்டத்தின்** கீழான வழக்குகளை பொறுத்தவரையில் புலன் விசாரணை மேற்கொள்ள அதிகாரமில்லாத சிறப்பு உதவி ஆய்வாளரான அ.சா.7 பாலசுப்பிரமணியன் என்பவர் இவ்வழக்கில் 11 மாதங்கள் புலன்விசாரணை மேற்கொண்ட பின்னர் அ.சா.ஆ.6 முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாக கூறப்படுவது முற்றிலும் சட்டப்படி தவறான நடைமுறை ஆகும்.

**15.** இந்த வழக்கில், அ.சா.ஆ.6 ஆன முதல் தகவல் அறிக்கை 02.08.2019 ம் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக காணப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இறுதி அறிக்கை

17.02.2020-ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக காணப்பட்டுள்ளது. ப.சா.&ப.ப.(வ.கொ.த) சட்ட விதிகளில் காணப்படும் விதி 7(2)-ன் படி குற்ற இறுதி அறிக்கை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 60 நாட்களுக்குள்ளாக தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் ஒருவேலை காலதாமதமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அதற்கான காலதாமதத்தை சொல்லவேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆனால், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள தேதியிலிருந்து 199 நாட்கள் காலம் கடந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இதன்படி பார்க்கும்போது, 60 நாட்களுக்கு பின்னர் தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இறுதி அறிக்கை காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதிலும், காலதாமதத்திற்கான விளக்கம் எதுவும் இறுதி அறிக்கையில் கூறப்படவில்லை. எனவே, இந்த வழக்கின் இறுதி அறிக்கையானது சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள நடைமுறையின் கீழ் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது.

**16.** இந்த வழக்கில் அ.சா.ஆ-6 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தற்கு முன்னதாகவும் புலன் விசாரணை 11 மாதங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் அ.சா.ஆ-6 பதிவு செய்யப்பட்டுள்ளது

என்ற பொருண்மை, பின்னர் இறுதி அறிக்கையானது சட்ட விதிகளில் சொல்லப்பட்டுள்ள கால வரையறைக்கு பின்னர் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற பொருண்மைகள் அனைத்தும் இந்த வழக்கில் இறுதி அறிக்கையில் தெரிய வருகிறது. பல்வேறு சட்ட விதி மீறல்கள் புரிந்துள்ளது தெரிய வருகிறது. இவ்வாறு சட்ட விதி மீறல்கள் புரிந்துள்ளதாக தெரிய வருகின்ற காரணத்தினால் காவல் துறையிர் தாக்கல் செய்துள்ள இந்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரிகள் குற்றவாளிகள் என கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** மேற்கண்டவாறு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்ததில் இந்த வழக்கில் உள்ள 1 முதல் 3 வரையிலான எதிரிகள் குற்றம் செய்துள்ளதாக அறுதியாக முடிவு செய்யும் வகையில் சாட்சியங்கள் இல்லை என்பதால் இந்த வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு வழங்க இந்நீதின்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,** 1-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352- ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 448, 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r)(s), இ.த.ச பிரிவு 506(i) உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச பிரிவு 352-ன்

கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 235-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.12 17:49:45 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u> :-**

| | |
|---|---|
| அ.சா.1 | அமுதா - நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | மனோகர் |
| அ.சா.3 | முத்து |
| அ.சா.4 | மாரிமுத்து |
| அ.சா.5 | ராஜன்பாபு |
| அ.சா.6 | செந்தில்குமார் |
| அ.சா.7 | பாலசுப்பிரமணியன் - சிறப்பு உதவி ஆய்வாளர் |
| அ.சா.8 | இனிக்கோ திவ்யன் - காவல்துணை கண்காணிப்பாளர் |
| அ.சா.9 | பழனிச்சாமி - காவல்துணை கண்காணிப்பாளர் |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.3-ன் முதலாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4-ன் இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | அ.சா.1-ன் சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ.5 | 1-ம் எதிரியின் சாதி சான்றிதழ் |
| அ.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை |

| | |
|---|---|
| அ.சா.ஆ.7 | திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக உத்தரவு |
| அ.சா.ஆ.8 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.9 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக உத்தரவு |

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருள் :-**

- இல்லை-

**எதிரிகள் தரப்பு சாட்சி , சான்றவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:-**

-இல்லை-

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.12 17:49:54 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.